இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உலகில் நிலவும் போர்கள் மற்றும் மோதல்களுக்கு மத்தியிலும், திருஅவை தனது போதனைகள் மற்றும் செயல்பாடுகள் வழியாக எவ்வாறு அமைதியையும் ஒப்புரவையும் கட்டியெழுப்ப வேண்டும் என்பது குறித்து திருத்தந்தை 14-ஆம் லியோ கர்தினால்மார்களுடன் கலந்துரையாடுவார்.

# "இளைஞர்கள் யாரும் அன்பியக் கூட்டங்களுக்கு வருவதில்லை."

மலேசியாவில் உள்ள பெரும்பாலான பங்குகளில் (Parishes) பொதுவாகக் கேட்கும் குரல்கள் இவை. கிராமப்புறப் பங்குகளில், இளைஞர்கள் தங்கள் மேற்படிப்புக்காகவும் வேலைக்காகவும் நகரங்களை நோக்கிச் செல்வதால், இந்தக் கூற்று உண்மையாகவே தோன்றலாம். சிறிய அளவிலான திருப்பலி வழிபாட்டுக் குழுக்களும், முதியவர்கள் மட்டுமே நிறைந்திருக்கும் அன்பியங்களும் (BEC - Basic Ecclesial Communities) திருஅவை மெல்ல மெல்ல வயதாகிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணத்தையே நமக்குத் தருகின்றன.

இளம்தொழில்முறைப் பணியாளர்கள் (young professionals) நிறைந்த நகரத்துப் பங்குகளில் கூட, அன்பியக் கூட்டங்களில் முதியவர்களே அதிகமாகக் காணப்படுகிறார்கள்.

அப்படியானால், கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்குக் குடிபெயர்ந்த கத்தோலிக்க இளைஞர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? நமது ஆலயங்கள் ஒன்றும் பாழடைந்து கிடக்கவில்லையே! ஞாயிறு திருப்பலிகள் (Masses) மக்களால் நிரம்பி வழிகின்றன. திருவிழாக் கொண்டாட்டங்களுக்குப் பெருந்திரளான மக்கள் வருகிறார்கள். இளைஞர்கள் ஆலயப் பாடகர்க் குழுக்களிலும் (Choirs), இளைஞர் இயக்கங்களிலும் (Youth Ministries), சமூகப் பணித் திட்டங்களிலும், பங்கு நிகழ்வுகளிலும் சுறுசுறுப்பாகப் பங்கேற்கிறார்கள். அதுமட்டுமன்றி, இணையதள உலகிலும் கத்தோலிக்க வாழ்வு குறித்த உரையாடல்களில் அவர்கள் ஈடுபாட்டுடன் இருக்கிறார்கள். இதிலிருந்து கத்தோலிக்க இளைஞர்கள் திருஅவை விட்டு ஒழிவிடவில்லை, அவர்கள் இங்கேயேதான் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இருப்பினும், ஞாயிறு வழிபாட்டைக் கடந்து, பங்கின் நிர்வாகக் கட்டமைப்பைக் கவனிக்கும் போதுதான் கவலை ஆழமாகிறது. பல பங்குகளில், அன்பியக் கூட்டங்கள் இன்னும் முதியவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. பங்குப் பேரவைகளும் (PPC - Parish Pastoral Councils) இதே வயதானவர்களின் நிலையையே பிரதிபலிக்கின்றன. பங்கின் செயல்பாடுகளைத் திட்டமிடுதல், வழிநடத்துதல் மற்றும் நிர்வகித்தல் போன்ற பொறுப்புகள், பல தசாப்தங்களாக அவற்றைச் சுமந்து வரும் முதியவர்களின் தோள்களிலேயே இன்னும் இருக்கின்றன.

இது ஒரு ஆழமான கேள்வியை எழுப்புகிறது: இளைஞர்கள் வழிபாட்டில் பங்கேற்கிறார்கள், ஆனால் பணி வாழ்வின் (Community) மையப் பொறுப்புகளில் புறக்கணிக்கப்படுகிறார்களா? நாம் அறியாமலேயே அத்தகையதொரு அமைப்பை உருவாக்கிவிட்டோமா?

இதற்குப் பகுதியளவு காரணம், நவீன வாழ்வின் யதார்த்தங்கள் ஆகும். இன்றைய இளைஞர்கள் தங்களின் பணிவாழ்வு, நீண்ட பயணங்கள், வளர்ந்து வரும் குடும்பப் பொறுப்புகள் போன்றவற்றுக்கு இடையே போராட வேண்டியுள்ளது. பலர் தங்கள் சொந்தப் பங்கை விட்டு வெகுதொலைவில் வாழ்கிறார்கள்; ஒரே பகுதியில் நீண்ட காலம் தங்குவதும் இல்லை. இதனால் வாரந்தோறும் திருப்பலிக்கு வருவது அவர்களுக்குச் சாத்தியமாகிறது, ஆனால் வழக்கமான கூட்டங்களுக்கும் திருஅவைக் கட்டமைப்புகளுக்கும் நேரம் ஒதுக்குவது சவாலாக இருக்கிறது.

ஆனால், நடைமுறைச் சிக்கல்கள் மட்டுமே முழுமையான காரணம் அல்ல. ஓர் இளைஞரை அன்பியக் கூட்டத்திற்கு அழைத்துப் பாருங்கள்; ஒரு தயக்கமான புன்னகையோ அல்லது ஒரு பெருமூச்சேதான் பதிலாகக் கிடைக்கும். இங்கே பிரச்சினை விசுவாசத்தில் இல்லை, மாறாக தங்கள் சொந்தக் குடும்பம் என்ற பிணைப்புணர்வு (Belonging) இல்லாததே காரணம். பல இளைஞர்களுக்கு, இந்தத் பாரம்பரியக் கூட்டங்கள் இன்றைய தனிநபர்வாதச் சமூகத்தில் தங்களின் யதார்த்த வாழ்வோடு ஒத்துப்போகாதது போல் தோன்றுகின்றன.

அதே நேரத்தில், நமது பங்குக் கட்டமைப்புகளும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். புதிய இளைஞர்கள் ஒரு பங்கிற்குள் நுழையும் போது, அவர்கள் பணி வாழ்வில் இணைவதற்கான வழிகள் திறந்திருக்கின்றனவா, அல்லது அது ஒரு மூடிய வட்டமாக இருக்கிறதா? திருஅவையின் வாழும் செல்களாக (Living Cells) உருவாக்கப்பட வேண்டிய அன்பியங்கள், பல இடங்களில் பல ஆண்டுகளாக இருக்கும் ஒரு குறிப்பிட்ட சில உறுப்பினர்களின் நிலையான குழுக்களாக மட்டுமே மாறிவிட்டன.

இந்தத் தொடர்ச்சி நல்லதுதான், ஆனால் அது புதியவர்களை உள்வாங்கத் தவறும்போது, மற்றவர்களைப் புறக்கணிப்பதாக மாறிவிடுகிறது. தங்களைப் புதுப்பித்துக் கொள்ளாத குழுக்கள், நல்லெண்ணம் கொண்டவையாக இருந்தாலும், "இங்கே புதியவர்களுக்கு இடமில்லை" என்ற தவறான செய்தியையே மற்றவர்களுக்குக் கொண்டு சேர்க்கின்றன.

இதன் பொருள் இளைஞர்கள் திருஅவையின் மீது பற்று அற்றவர்கள் என்பதல்ல. பலர் திருஅவையின் வாழ்விலும் அதன் மறைப்பணிப் பயணத்திலும் (Mission) ஆழமான அர்ப்பணிப்புடன் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பணி வாழ்வை அனுபவிக்கும் விதம் மாறியிருக்கலாம். கடந்த பல தசாப்தங்களாக, "மக்களை எவ்வாறு பங்கிற்குள் ஈர்ப்பது?" என்றுதான் திருஅவை சிந்தித்துக் கொண்டிருந்தது. ஆனால் இன்று, "தேவாலயத்திற்கு வரும் அவர்களை எவ்வாறு ஆன்மீக ரீதியாக உருவாக்குவது?" என்பதே மிக முக்கியமானப் பணியாகும்.

தலைமைத்துவக் கட்டமைப்புகளும் ஆராயப்பட வேண்டும். பல பங்குப் பேரவைகளில் (PPC) முதியவர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர்களின் அனுபவம் ஈடு இணையற்றது, அவர்களின் பல ஆண்டுகால உழைப்புதான் எண்ணற்ற பங்களை இன்றுவரை தாங்கிப் பிடித்துள்ளது. கேள்வி அவர்கள் நன்றாகச் சேவை செய்தார்களா என்பதில்லை, மாறாக அடுத்த தலைமுறையினரை அந்தப் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ள நாம் எவ்வாறு அழைக்கப் போகிறோம் என்பதில் தான் இருக்கிறது.

இது முதியவர்களை நீக்கிவிட்டு இளைஞர்களை அமர்த்துவதற்கான அழைப்பு அல்ல, மாறாக இருதரப்பினரையும் ஒன்றிணைப்பதற்கான அழைப்பு. தலைமுறைகளுக்கு இடையே உரையாடல் இல்லாத ஒரு 'ஒன்றிணைந்து பயணிக்கும் திருஅவை' (Synodal Church) ஒருபோதும் முழுமையடையாது.

நமது திருஅவை அருட்சாதன வாழ்விலும் (Sacramental life) மறைப்பணி ஆற்றலிலும் இளமையாக இருக்கிறது. அதே நேரத்தில், நிறுவன நினைவுகளிலும் (Institutional memory) கட்டமைப்புத் தலைமையிலும் முதிர்ச்சியடைந்து (வயதாகி) இருக்கிறது.

ஒருவேளை, நாம் கேட்க வேண்டிய அவசரமான கேள்வி புள்ளிவிவரங்கள் சார்ந்தது அல்ல, மாறாக திருஅவை இயல் (Ecclesiological) சார்ந்தது: நமது பங்குகள் வெவ்வேறு தலைமுறையினர் உண்மையாகவே ஒருவரையொருவர் சந்தித்து உறவாடும் தளமாக இருக்கிறதா, அல்லது ஒரே வழிபாட்டு இடத்தில் சும்மா வந்து போகும் கூட்டமாக இருக்கிறதா?

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயம் நிறைந்து வழிவது மட்டுமே ஆன்மீக ஆரோக்கியத்தின் அளவுகோல் அல்ல. உண்மையான ஆரோக்கியமான திருஅவை என்பது, வழிபாட்டுப் பங்களிப்பு (Participation) குடும்பப் பிணைப்புணர்வாக மாற வேண்டும்; அந்தப் பிணைப்புணர்வு பொறுப்புணர்வாக (Responsibility) மலர வேண்டும்; அந்தப் பொறுப்புணர்வு தலைமுறைகளைக் கடந்து பகிரப்பட்ட தலைமைத்துவமாக (Shared Leadership) மாற வேண்டும். இந்த ஒருங்கிணைப்பை நாம் திட்டமிட்டுச் செய்யாதவரை, மலேசியத் திருஅவை வெளிப்புறத் தோற்றத்தில் துடிப்புடன் இருந்தாலும், உள்முகமாகத் துண்டு துண்டாகவே இருக்கும்.

திருஅவையின் எதிர்காலம் அது இளமையாக இருக்கிறதா அல்லது வயதாகிவிட்டதா என்பதில் இல்லை. அது ஒன்றாக வாழக் கற்றுக் கொள்கிறதா என்பதில்தான் அடங்கியிருக்கிறது.

கிறிஸ்டினா லாசரு

# உலக அமைதிக்காகவும் திருஅவையின் வளர்ச்சிக்காகவும் கர்தினால்மார்களின் அவசர மாமன்றக் கூட்டம்!



தூய பேதுரு, தூய பவுல் பெருவிழாவிற்கு முன்னதாக, ஜூன் 26, 27 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கும் கர்தினால்மார்களின் இந்தச் சிறப்பு மாமன்றத்திற்கான அதிகாரப்பூர்வ கால அட்டவணையை வத்திக்கான் செய்தித் தொடர்பகம் வெளியிட்டுள்ளது.

உலகில் நிலவும் போர்கள் மற்றும் மோதல்களுக்கு மத்தியிலும், திருஅவை தனது போதனைகள் மற்றும் செயல்பாடுகள் வழியாக எவ்வாறு அமைதியையும் ஒப்புரவையும் கட்டியெழுப்ப வேண்டும் என்பது குறித்து திருத்தந்தை 14-ஆம் லியோ கர்தினால்மார்களுடன் கலந்துரையாடுவார்.

திருத்தந்தை லியோவின் ஆட்சிப்பொறுப்பில் நடைபெறும் இரண்டாவது மாமன்றக் கூட்டம் இதுவாகும். இதற்கு முன்பு கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற கூட்டத்தில், உலகெங்கிலும் இருந்து வாக்களிக்கும் தகுதியுடைய மற்றும் ஓய்வுபெற்ற 170 கர்தினால்மார்கள் கலந்துகொண்டனர். அன்றைய கூட்டத்தின் நிறைவில், "உங்களுடைய ஆதரவும் ஆலோசனையும் எனக்கு மிகவும் தேவைப்படுகிறது" என்று கூறி, இந்த ஜூன் மாதக் கூட்டத்திற்கான அறிவிப்பைத் திருத்தந்தை வெளியிட்டார்.

இந்த மாமன்றக் கூட்டம், ஒருவருக்கொருவர் செவிமடுக்கும் "synodal" (உலகளாவிய ஆயர்கள் மாமன்ற) முறையில் நடைபெறும். இதில் செபம், அமைதி, தனிப்பட்ட தியானம், குழு விவாதம் மற்றும் பொது அமர்வுகள் இடம் பெறும். கர்தினால்மார்கள் தங்களுக்குள் சகோதரத்துவத்தோடு வெளிப்படையாகப் பேசுவதற்கு ஏதுவாக, கூட்டத்தில் நடப்பவற்றை இரகசியமாக வைக்கவும், ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## நான்கு முக்கிய அமர்வுகள் (Four Sessions)

**மாமன்றத்தில் பங்கேற்பாளர்கள் 20 குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள்:**

- 9 குழுக்கள்: மறைமாவட்டங்களை வழிநடத்தும் ஆயர்களான கர்தினால்மார்கள் (Apostolic Nuncios எனப்படும் திருப்பீடத் தூதர்கள் மற்றும் பணி நிறைவு பெற்றவர்கள் உட்பட).
- 11 குழுக்கள்: வத்திக்கான் தலைமையகத்தில் (Roman Curia) பணியாற்றும் கர்தினால்மார்கள் மற்றும் வாக்களிக்கும் வயதைக் கடந்த மூத்த கர்தினால்மார்கள்.

ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவரும், விவாதங்களைத் தொகுத்து அறிக்கை தயாரிப்பதற்கென ஒரு செயலரும் நியமிக்கப்படுவர்.

**வெள்ளிக்கிழமை (ஜூன் 26) நிகழ்வுகள்:**

- தொடக்கத் திருப்பலி: வெள்ளிக்கிழமை காலை, தூய பேதுரு பேராலயத்தில் திருத்தந்தை 14-ஆம் லியோ தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்படும்.
- தொடக்க அமர்வு: அதன் பிறகு கர்தினால்மார்கள் 'ஆறாம் பவுல்' அரங்கிற்குச் செல்வர். தூய ஆவிப் பாடலுடன் (Veni Creator Spiritus) கூட்டம் தொடங்கும். கர்தினால் குழுவின் முதல்வர் கர்தினால் ஜோவான்னி பத்தீஸ்தா ரே வரவேற்புரை ஆற்ற, திருத்தந்தை தொடக்க உரை வழங்குவார்.
- முதல் அமர்வு: "நாம் எத்தகைய உலகத்தில் நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்படுகிறோம்?" என்ற தலைப்பில் விவாதம் நடக்கும். கிராக்கோவ் பேராயர் கர்தினால் கிரெகோர்ஸ் ராஸ் விவிலியத் தியானம் வழங்குவார். அதைத் தொடர்ந்து அமைதிச் செபமும் குழுப் பகிர்வும் நடைபெறும்.
- இரண்டாம் அமர்வு (மதியம்): "அதிகாரக் கலாச்சாரமும் அன்பின் நாகரிகமும்" என்ற தலைப்பில் விவாதம் நடைபெறும்.

## பொதுநலனைக் கட்டியெழுப்புதல்

**சனிக்கிழமை (ஜூன் 27) நிகழ்வுகள்:**

- சனிக்கிழமை காலை, கர்தினால் ரே தலைமையில் தூய பேதுரு பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டதும், கர்தினால்மார்கள் மீண்டும் 'ஆறாம் பவுல்' அரங்கில் கூடுவர்.
- மூன்றாம் அமர்வு: "நன்மையில் கட்டியெழுப்புதல்: நம் காலத்தின் பணித்தளங்கள்" என்ற தலைப்பில். சமூகத்தில் பொதுநலனை உருவாக்குவதில் உள்ள தடைகள், மக்களிடமிருந்து எழும் கேள்விகள் மற்றும் உள்ளூர் திருச்சபைகளும் உலகத் திருச்சபையும் வழங்கக்கூடிய ஆதரவு குறித்து இங்கு விவாதிக்கப்படும்.
- நான்காம் அமர்வு (மதியம்): புதிய மாமன்ற அரங்கில் நடக்கும் இந்த இறுதி அமர்வு, "ஆயர்கள் மாமன்ற முடிவுகளைச் செயல்படுத்துதல்" என்ற தலைப்பில் அமையும். ஆயர்கள் மாமன்றத்தின் பொதுச்செயலாளர் கர்தினால் மரியோ கிரெக், 2027-2028 மாமன்றக் கூட்டங்களுக்கான தயாரிப்பு ஆவணத்தின் அடிப்படையில் உரையாற்றுவார்.

## நிறைவு நிகழ்வுகள்

திருத்தந்தையின் இறுதி உரையுடன் இந்த மாமன்றக் கூட்டம் நிறைவடையும். தொடர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக 'தே தேயும்' (Te Deum) திருப்புகழ் பாடல் பாடப்படும். இறுதியாக, 'ஆறாம் பவுல்' அரங்கில் திருத்தந்தையுடன் இணைந்து கர்தினால்மார்கள் இரவு விருந்தில் பங்கேற்பர்.

பெருவிழா திருப்பலி: வருகிற திங்கட்கிழமை, ஜூன் 29 அன்று, திருத்னதர்களான தூய பேதுரு, தூய பவுல் பெருவிழா திருப்பலியைத் திருத்தந்தை 14-ஆம் லியோ, தூய பேதுரு பேராலயத்தில் தலைமை தாங்கி நடத்துவார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# 'நம்பிக்கையை உயிர்ப்பிக்கும், கடவுளின் போதனைவியல்'



கோலாலம்பூர் மறைக்கல்வி மறைமாவட்டம் ஆணைய ஏற்பாட்டில் ஓராண்டு மறைக்கல்வி சான்றிதழ் உருவாக்க பயிற்சி (Certificate in Catechist), பிப்ரவரி 2026 தொடங்கி நவம்பர் 2026 வரை ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட சனிக்கிழமைகளில், கோலாலம்பூர் புனித அந்தோணியார் ஆலயத்தில் உள்ள 'Cahayasuara' என்ற இடத்தில் நடைபெற்றுவருகிறது. அருட்சகோதரி ரீத்தா அவர்கள் கடந்த மே மாதம் இந்த அமர்வை மிகத் தெளிவாகவும் அருமையாகவும் நடத்தினார்.

"நம்பிக்கையின் போதனைவியல்" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த அமர்வு, மறைபோதகத்தின் இதயத்தையும் அதன் உண்மையான நோக்கத்தையும் ஆழமாக எடுத்துரைத்தது. மறைபோதகர் வெறும் ஆசிரியர் மட்டுமல்ல; அவர் மக்களை கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லும் வழிகாட்டி. இதற்காக, போதனைவியல் மற்றும் வழிமுறையியல் ஆகியவற்றின் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. கற்பித்தலின் நோக்கம் மற்றும் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்வதோடு, அதை மக்களின் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி, வழங்கும் திறனும் மறைபோதகருக்கு அவசியம் என்பதை அமர்வு எடுத்துக்காட்டியது.

இறைவன் மனிதகுலத்தை மீட்பதற்காக தம்மை படிப்படியாக வெளிப்படுத்திய விதமே மறைபோதகத்தின் அடிப்படை போதனைவியல் என விளக்கப்பட்டது. வரலாற்றின் வழியாக இறைவன் மனிதரை வழிநடத்தியதுபோல, மறைபோதகமும் பொறுமையுடனும் அன்புடனும் நம்பிக்கையில் வளரச் செய்யும் பணியாகும். இந்த தெய்வீக போதனைவியல் இயேசு கிறிஸ்துவில் முழுமை பெறுகிறது. தமது வார்த்தைகள், உவமைகள், கேள்விகள் மற்றும் இரக்கமிக்க செயல்கள் மூலம் இயேசு மக்களை இறைவனிடம் இட்டுச் சென்றார். எனவே, கத்தோலிக்க திருஅவையின் மறைபோதகம் நூல் கூறுவது போல, மறைபோதகத்தின் மையத்தில் இயேசு கிறிஸ்துவே இருக்கிறார் (CCC 426).

மறைபோதகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு வழிமுறைகள் பற்றியும் விரிவாகப் பகிரப்பட்டது. மனித அனுபவம், இறைவார்த்தை மற்றும் நம்பிக்கையின் பதில் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படும்போது மட்டுமே உண்மையான இறை நம்பிக்கை உருவாக்கம் நிகழும். கற்பவர்களின் வயது, சூழ்நிலை மற்றும் ஆன்மீகத் தேவைகளுக்கு ஏற்ப அணுகுமுறைகளைத் தேர்ந்தெடுப்பதன் அவசியமும் இந்த அமர்வில் அருட்சகோதரி ரீத்தா அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

எம்மாவுஸ் வழியில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் சீடர்களுடன் நடந்து, அவர்களின் மனக்கவலைகளை கேட்டு, திருமறைகளை விளக்கி, அவர்களின் இதயங்களை பற்றி எரியச் செய்தார். அதுபோலவே மறைபோதகரும் மக்களுடன் பயணித்து, அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை நம்பிக்கையின் ஒளியில் புரிந்துகொள்ள உதவ அழைக்கப்படுகிறார்.

அறிவை வழங்குவதைக் கடந்து, கிறிஸ்துவுடன் தனிப்பட்ட சந்திப்பை உருவாக்கி, நம்பிக்கையை வாழ்வில் சாட்சியாக மாற்றுவதே நம்பிக்கையின் போதனைவியலின் உண்மையான நோக்கமாகும் என்பதை இந்த அமர்வு எனக்கு உணர்த்தியது.

ஜெனிபர் கந்தசாமி
லூர்து மாதா ஆலயம் கிள்ளான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

# அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு





ஜொகூர், சாஆ புனித அந்தோனியார் ஆலயத்தில், அந்தோனியார் திருநாள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மூன்று அருட்பணியாளர்கள், ஒரு திருத்தொண்டர் ஆகியோருடன் சுமார் நானூறு நம்பிக்கையாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

முதல் நவநாள் கொடியேற்றும் தினத்தில், அருட்பணியாளர் ஜோன் ஆனந்தன் அவர்கள் அந்தோனியார் கொடி பறப்பதுபோல நாமும் நற்செய்தியை ஊக்கத்துடன் பரப்பிட வேண்டும் என கூறினார்.

திருவிழா திருப்பலியன்று, இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுவது போல அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு என்பதற்கொப்ப, இந்த ஊரிலிருந்து பல இடங்களுக்கு புலம்பெயர்ந்துள்ளீர்கள். இங்கே கற்றுக்கொண்ட இறை செய்தி அனுபவத்தை நீங்கள் சென்ற இடங்களுக்கு உரைத்திட வேண்டும். சாட்சியம் பகற வேண்டும். எழுபத்திரண்டு சீடர்களை அனுப்பியது போல உங்களையும் அனுப்பியுள்ளார். நீங்களும் சீடத்துவத்தை ஆழப்படுத்துங்கள் எனக்கூறி புதுவை அந்தோனியாரின் அற்புதங்களையும் எடுத்துரைத்தார்.

அருட்பணியாளர் எடின் பிரான்சிஸ் நன்றியுரையாற்றினார். அனைவருக்கும் இரா உணவு அளிக்கப்பட்டது. நீண்ட நாள் சந்திக்காத நண்பர்கள், உறவினர்களுடன் உரையாடி இல்லம் திரும்பினர்.

ஆவி.டேவிட்.

## 14ஆம் ஞாயிறு (5.7.26)

**செக் 9:9-10, ரோ 8:9,11-13, மத் 11:25-30**

### பிறரன்பு இறையன்பின் அடித்தளம்

திருஅவை இன்று பொதுக்காலத்தின் 14வது ஞாயிறைக் கொண்டாடுகிறது. முதல் வாசகம், சுமைகளைப் போக்கி சுகம் தருபவர் கடவுள் என்பதை வலியுறுத்துகிறது.

நற்செய்தியில் "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், உங்களை நான் இளைப்பாற்றுவேன்" (11:28) என்கிறார் இயேசு.

ஆம், இறைவன் தரும் இளைப்பாற்றி என்பது துயரற்ற, அன்பு நிறைந்த, மகிழ்ச்சி கொள்ளும் உன்னதமான வாழ்வு. அத்தகைய இளைப்பாற்றியை நாம் பெறுவோம். இத்தகைய இளைப்பாறியைப் பெறுவது சிலுவையின் வழியில்தான். பிறருக்காக நாம் சுமக்கும் சிலுவைகள் இனிப்பானது. ஏனென்றால் தாங்க முடியாத அளவுக்கு இறைவன் நம்மேல் துன்பங்களை வருவிக்க அனுமதிக்க மாட்டார் என்பதைத் தூய பவுல் தெளிவாக்குகிறார். இயேசு தாமே சோதனைக்கு உட்பட்டு, துன்பங்களைத் தாங்கியிருப்பதால் அவரிடம் முழுமையான அன்பும், அக்கறையும் நம்மிடமில் உண்டு என்பதை நாம் உறுதியாகக் கற்றுக்கொள்ள முடியும்.

இது குறித்து ஒருவருடைய வாழ்க்கையின் சாட்சியத்தை பார்ப்போம்.

ஓர் எளிமையான, பக்தியான கிறிஸ்துவ குடும்பம். அப்பா, அம்மா, மூன்று பெண் குழந்தைகள். அப்பாவின் உழைப்பிலேதான் அக்குடும்பமே வாழ்ந்து கொண்டிருந்தது.

குடும்ப தலைவர் நோய்வாய்ப்பட்டு இறக்க, பலத்த அடியில் அக்குடும்பம் வீழ்கிறது. கணவரின் இழப்பு பெரிய சுமையாகிறது. சிலகாலம் கழித்து, இன்னொரு பேரிடி. கணவனை இழந்த அப்பெண்மணிக்கு தலையில் கட்டி ஏற்பட்டு இன்னொரு தாங்காத சுமையை அந்தக் குடும்பத்தை வாட்டி எடுத்தது. மருத்துவர்கள் கைவிடப்பட்ட சூழ்நிலையில், தொடர்ந்த சுமைகளை கற்பனையில்கூட நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

இருப்பினும் அவர்களுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையும் ஊட்டிய இறைவார்த்தை "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், உங்களை நான் இளைப்பாற்றுவேன்" (மத்11:28)என்பதுதான்.

அனுதினமும் தங்களது சுமைகளை வேதனையோடும், கண்ணீரோடும், நோன்பிருந்தும் ஆண்டவரிடத்தில் முழுமனதோடு ஒப்படைத்தனர். திருப்பலியில் பக்தியோடு பங்கேற்றனர்.

பங்கு மக்கள், மற்றும் நண்பர்களின் உதவியால் பலதரப்பட்ட வகையில் உதவிகள் கிடைத்தன. மருத்துவமனையில் உதவி, பள்ளி படிப்பு, வேலை கிடைக்க வாய்ப்பு, குடும்பத்தில் அன்றாட தேவைகளின் செலவுகள் என பலரின் வழியாக அவர்களுக்கு உதவிகள் கிடைக்கப்பெற்றன.

நாட்கள் செல்லச் செல்ல குடும்ப தலைவியும் குணமடைந்தார். சீரான நிலைக்கு திரும்பினார். ஆண்டவரின் கருணை, கரிசனம், அன்பை அடுத்திருந்தவர்களின் மூலம் இறைவனின் வெளிப்பாட்டை உணர்ந்து நன்றி செலுத்தி வந்தனர்.

எனவே ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் துன்பங்களை, சுமைகளை தாங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தீமைகள் புரிந்து அதனாலான சுமைகளை தாங்குவதற்கு பதிலாக இறைவனுக்கு திருவுளமானால் நன்மை செய்து துன்புறுவதே மேல் என்ற வார்த்தைகள் நமக்குப் பலம் தரட்டும்.

எருதுகளின் கழுத்தில் நுகத்தடியைப் பொருத்தி இரண்டையும் சேர்த்துக் கட்டி, வண்டியில் உள்ள கனமான பொருட்களை இழுக்கப் பயன்படும் சாதனம். நுகம் எருதுகளுக்குப் பாரமாகவோ, சுமையாகவோ இருப்பதில்லை. மாறாக சுகமான சுமயாகவே கருதி பொருட்களை இழுக்கின்றது. தச்சு தொழிலை அறிந்திருந்த இயேசு அதை நன்கு புரிந்து உவமையாக அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

எனவே இன்றைய நற்செய்தி இறைவனுடைய வெளிப்பாடுகளை உணர்ந்து ஆசீர்பெறுவோம். அத்தோடு நாம் எதிர்கொள்ளும் சிலுவையை ஏற்று, அதாவது நுகத்தை ஏற்று சீடத்துவத்தை ஆழப்படுத்தி வாழ்வோம்.

ஆ.வி.டேவிட்.

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:
மின்னஞ்சல்: **tamil@herald.com.my** வாட்ஸ்அப்: **012-5599015**